முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்கு அந்த வீட்டு மனையைக் கொடுத்து, அவர்கள் வீடு கட்டி வாழ்கின்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டு, முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

## 5. 25–3–1989 ஆம் நாளைய நடவடிக்கைக் குறிப்புகளிலுள்ள செய்திகள் தொடர்பான பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி. எம். ரங்க ராஜன்.

* திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலே, இந்த அவையிலே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள், போன பேரவையில் உறுப்பின ராக இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு, 25—3—1989 அன்று நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கே தெரிவித்தார்கள். அந்த உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்துக்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக அசெம்பிளி நூலகத்திற்குச் சென்று அன்றைய அசெம்பிளி புரொசீடிங்சை நான் பார்க்க நேரிட்டது. அன்றைக்கு அந்த புரொசீடிங்சிலே பல நிகழ்ச்சிகளை இங்கே நம்முடைய உறுப்பினர்கள் கூறுவதற்கு மாறாக அந்த 'அபிஷியல் ரிப்போர்ட்டில்' ரிப்போர்ட் செய்யப்பட்டு இருப் பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவ்வாறு தவறாக தெரிவிக்கப்பட்டிருக்கின்ற அந்த நிகழ்ச்சிகளை எல்லாம் அந்த குறிப்பிலிருந்து எடுப்பதற்குத் தாங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ரங்க ராஜன் அவர்கள் தெரிவித்ததைப்போல் நானும் பேரவையின் அன்றைய அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டிருக்கிற தொகுப் பினையும், அன்றையதினம் பேரவைத் தலைவருக்கு வழங்கப் பட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் பற்றிய பேரவையின் ரெக்கார்டு களையும் சரி பார்த்தேன். பார்க்கிறபோது இந்தப் பேரவையின் மரபுக்கு மீறி—பேரவையில் வழக்கமாக நடக்கிற சில பேச்சுகள் ரெக்கார்டு ஆகும், ஆனால் செய்கைகள் என்று ரெக்கார்டு ஆகி வருவது, வெளிநடப்பு என்றால் இந்த உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தார்கள் என்பது ரெக்கார்டு ஆகும். சிரிப்பு, கரவொலி இவைதான் ரெக்கார்டு ஆகும். பாராளுமன்றத்திலே கூட அதுதான் நடைமுறையில் இன்றைக்கும் கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது,—அதற்கு மாறுபாடாக பல்வேறு நிகழ்ச்சி களை அடைப்புக் குறிக்குள்ளே போட்டு, இப்படி இப்படி

1992 மார்ச் 25] [பேரவைத் தலைவர்]

யெல்லாம் அவைக்குள்ளே நடந்தது என்று அச்சாகியிருக்கிறது. ஒருவேளை அதுவே பேரவைத் தலைவருக்குக் கொடுக்கப்பட்ட குறிப்புகளில் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் பார்த்தேன். அதிலேயும் சிலபல இடைச் செருகல்கள் இருப்பது கண்கூடாகத் தெரிகிறது. எனவே இவற்றை எல்லாம் நீக்குவதா அல்லது வேறு வகையில் திருத்தம் செய்ய முடியுமா என்பதை எல்லாம் நம்முடைய பேரவை விதிகளையும், நாடாளுமன்ற மரபுகள், நடைமுறைகள் பற்றியவையையும் முழுமையாக ஆராய்ந்து என்னுடைய தீர்ப்பை நாளை வழங்குகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1992—93— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழமையான இலக்கியங்களையும் பாரம்பரியப் பண்பாட்டுச் சிறப்புகளையும், தொன்மையான நாகரீகப் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டது தமிழ் நாடு. உலகின் மூத்த மொழிகளில் முதன்மையானது நம் தாய் மொழி தமிழ். நீண்ட நெடிய சரித்திரப் புகழையும், காலத்திற்கேற்ற மாறுதல்களையும் உள்ளடக்கி என்றென்றும் நிலைத்து நிற்கும் பண்பாடு தமிழர் பண்பாடு. இந்த வரலாற்றுப் பெருமைகளின் வளர்ச்சிக்கு வழி காணுகின்ற திட்டங்களைச் செயல்படுத்தும் துறைதான், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையாகும். தமிழகத்தின் மொழி மேம்பாட்டுப் பெருமையையும், பண்பாட்டுப் புகழையும் உலகிற்கு வெளிப்படுத்துகின்ற பணியில் இத்துறை மகத்தான பணியாற்றி வருகின்றது. தமிழர்கள் வரலாறு புதைந்து கிடக்கும் தமிழகத் திருக்கோயில்களை ஒரு முறை வலம் வந்தாலேயே, தமிழர் பண்பாட்டை நிறைவாகக் கற்றதற்கு ஒப்பாகும். எனவே, கோவில்கள் அமைந்துள்ள நகரங்கள், நமது சுற்றுலாத் துறையின் திட்டங்களுக்கு உயிரோட்டமாக அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது. உள்நாட்டுப்பயணிகள் மற்றும் அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அனைவரிடமும், சுற்றுலாவிற்கான ஊக்கத்தை உற்சாகப்படுத்துகிற வகையில் திட்டங்களைத் தீட்டி பணியாற்றி வருவது நமது சுற்றுலாத் துறையாகும். ஒரு ஜனநாயக அரசின் திட்டங்கள் மற்றும் அதன் சாதனைகள் மக்களைச் சென்றடைந்தால்தான், மக்களை அரசின் நிர்வாக நடவடிக்கைகளில் பங்கேற்க வைக்கின்ற மக்களாட்சித் தத்துவத்திற்கு நிறைவு ஏற்படும். பெரும்பான்மையான தமிழ் மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று ஆட்சிப் பொறுப்பிலுள்ள எங்கள் அரசின் சாத